# திருநாவுக்கரசர் – திருமங்கையாழ்வார் பாடல்களில் மந்திரங்களின் விழுமியங்கள்

# The Significance of Mantras in the Hymns of Thirunavukkarasar and Thirumangai Azhvaar

*முனைவர் வெ. செல்வசுப்பிரமணியன்*
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி)
கோயம்புத்தூர், இந்தியா

**Dr. V. Selvasubramanian**
*Associate Professor, Department of Tamil*
*Government Arts College (A)*
*Coimbatore, India*

**Citation**: Selvasubrmanian, V. "The Significance of Mantras in the Hymns of Thirunavukkarasar and Thirumangai Azhvar." *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 3, 2025, pp. 22-34

### ஆய்வுச் சுருக்கம்
*சமுதாயத்தில் வாழும் மக்களின் வாழ்க்கையைச் செழுமைப்படுத்தும் விதமாக திருநாவுக்கரசரின் பதிகங்களும் திருமங்கையாழ்வாரின் பாசுரங்களும் அமைந்துள்ளன. திருநாவுக்கரசர் திருமந்திரம் சமணர் களால் இழைக்கப்பட்ட கொடுமைகளினின்று இறைவன் திருவருள் துணை கொண்டு உய்வு பெற்றமைக்கு உறுதுணையாக இருந்தது நமசிவாய எனும் திருவைந்தெழுத்தாகும். திருமங்கையாழ்வாரும் நாராயணாய என்னும் நாமத்தை திருமகள் துணையோடு வந்த திருமாலிடம் திருமணங்கொல்லையில் நேரடியாக உபதேசம் பெற்றுப் பல பாசுரங்களைப் பாடினார். எனவே இவ்விரண்டு ஆன்றோர்களின் மந்திரங்களின் சிறப்புகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*
***முக்கியச் சொற்கள்:*** *திருநாவுக்கரசர், திருமங்கையாழ்வார், திருமந்திரம், சமணர்கள், பாசுரங்கள், பதிகங்கள்*

### Abstract
*The hymns of Thirunavukkarasar and the verses of Thirumangai Alvar are composed in a way that enriches the lives of people in society. Thirunavukkarasar's pathigams (hymns) played a crucial role in his liberation from the hardships inflicted by Jain monks, with the divine support of Lord Shiva. The sacred five-letter mantra "Namah Shivaya" was his spiritual refuge. Similarly, Thirumangai Alvar received direct initiation of the name "Narayana" from Lord Vishnu himself, with the divine presence of Goddess Lakshmi, at the sacred site of Thirumanankollai. Inspired by this divine experience, he composed numerous verses in devotion. Thus, this article aims to explore and analyze the significance of the mantras found in the hymns of these two revered saints.*
***Keywords****: Thirunavukkarasar, Thirumangai Alvar, Mantras, Devotion, Divine Grace, Hymns*

### சித்தாந்தங்களும் நெறிகளும்

*சமுதாயத்தில் வாழும் மக்களின் வாழ்க்கையைச் செழுமைப்படுத்தும் விதமாக திருநாவுக்கரசரின் பதிகங்களும், திருமங்கையாழ்வாரின் பாசுரங்களும் அமைந்துள்ளன. பதிகங்களிலும், பாசுரங்களிலும் அமைந்துள்ள மந்திரங்கள் பெறும் முக்கியத்துவம் இவ்வியலில் ஆராயப்படுகின்றது,*

**மந்திரத்தின் விளக்கம்**

*மந்திரம் திருப்பதிகங்களில் ஆற்றல் பெற்று அற்புதச் செயல் நடத்தியமை மந்திரம் என்பது வடமொழியில் தான் உண்டு என்ற நம் நாட்டு மக்களின் எண்ணம் தவறானது மந்திரத்தின் இலக்கணம் கூற வந்த தொல்காப்பியர்.*

***"நிறைமொழி மாந்தர் ஆணையில் கிளந்த***
***மறைமொழி தானே மந்திரம் என்ப"***

***(தொல்காப்பியம் பொருளதிகாரம், செய்யுளியல் நூற்பா, 480, ப,195)***

*என்றார். இந்நூற்பாவின் பொருள் எல்லா நற்பண்புகளும் நிறைந்து மொழிய வல்ல பெருமக்கள் ஆணையிட்டுக் கூறிய வாய்மொழிகள் யாவும் மந்திரம் ஆகும் என்பதாம்.*

*தொல்காப்பியர் பொதுப்பட மந்திரத்திற்கு இலக்கணம் கூறினாரேனும், சிறப்பாகத் தமிழ் மந்திரத்திற்கே இலக்கணம் கூறினார் என்பதும் தெளிவாகிறது. தமிழில் மறை நூல்களும், மந்திரங்களும் உண்டு என்பதை மேலும் வெளிப்பட உரைக்க எண்ணிய தொல்காப்பியர், "பாட்டுரை நூலே வாய்மொழி" என்றும், "நிறை மொழி" என்று தொடங்கும் நூற்பாவினை விளக்கி அதற்கு எடுத்துக்காட்டை இயம்ப வரும்போது,*

***"ஆரியம் நன்று தமிழ்தீ தென உரைத்த***
***காரியத்தால் காலக்கோட் பட்டானைச் - சீரிய***
***அந்தண் பொதியில் அகத்தியனார் ஆணையால்***
***செந்தமிழே தீர் க்க சிவர்"***

*என்ற தமிழ்ப்பாட்டை வாழ வைத்த மந்திரமாகவும்,*

***"முரணில் பொதியின் முதல்புத்தேள் வாழி***
***பரண கபிலரும் வாழி - அரணியல்***
***ஆனந்த வேட்கையான் வேட்கோக் குயக் கொண்டான்***
***ஆனந்தம் சேர் க சிவர்"***

*என்ற தமிழ்ப்பாட்டை அழிக்கச் செய்த மந்திரமாகவும் காட்டினர். " இவை வாயில் திறவாப்பட்டி மண்டபத்தார் பொருட்டு நக்கீரர் ஒருவன் வாழவும், சாவவும் பாடிய மந்திரம்" என்று விளக்கம் காட்டினர். ஈண்டு தீர் க்க என்பது உயிர் பெற்று எழுக என்பதையும், ஆனந்தம் சேர் க்க என்பது இறக்க என்பதையும் குறித்து நிற்கின்றன. திருஞானசம்பந்தர் பாடலான,*

***"செய்ய னேதிரு வாலவாய் மேவிய ஷ ஐயனே அஞ்சல் என்றருள் செய்யெனைப்***
***பொய்ய ராம் அம ணர் கொளு வுஞ்சுடர் ஷபைய வேசென்று பாண்டியற் காகவே***

***(திருஞானசம்பந்தர் தேவாரம் 3:51:1 ப.210)***

*என்பது பாண்டியனை வெப்பு நோய் பற்றுமாறு பணித்த பாடலாகும்.*

***"அரக்க னைவிர லால் அடர் த் திட்டநீர் ஷஇரக்கம் ஒன்றிலீர் ம்பெரு மான் நீரே***
***சுரக்கும் புன்னைகள் சுழ்மறைக் காடரோஷசரக்க இக்கத வம்திறப் பிம்மினே"***

***(திருநாவுக்கரசர் தேவாரம், 5:10:11, ப.70)***

*என்று பாட மூடி இருந்த கதவு திறக்கப்பட்டது.*

*சுந்தரர் அவிநாசி என்னும் தலத்தைக் கண்டு வணங்க வந்த போது தம் பிள்ளையை முதலை உண்ட காரணத்தால் அழுது கொண்டிருந்த பெற்றோர்கள் மகிழும் வண்ணம், அவர் இறைவனை நோக்கி,*

***“உரைப்பார் உரையுகந் துள்கவல்லார் ஷதங்கள் உச்சியாய்***
***அரைக்கா டரவா ஆதியும்ஷஅந்தமும் ஆயினாய்***
***புரைக்காடு சோலைப் புக்கொளிஷயுர் அவி நாசியே***
***காரைக்கால் முதலையைப் பிள்ளைஷதரச் சொல்லுகா லனையே”***

***(சுந்தரர் தேவாரம் 7:92:4, ப,750)***

*என்று பாடியதும் முதலை தான் உண்ட பாலனைக் கரையில் கக்கிச் சென்றது.*

*இங்ஙனம் பல அற்புதங்களைத் தமிழ்ப் பாடல்களைக் கொண்டே நம் முன்னோர் கள் செய்துள்ளனர். இதனால் நாம் அறிவது மந்திர சக்தி தமிழ் மொழிக்கு உண்டு என்பதும், நம் சமயாசிரியர்கள் வாக்கெல்லாம்தமிழ்மறை என்பதும், தமிழ் மொழியில் மந்திரம் உண்டு என்பதும் புலனாகிறது.*

*தமிழ் வேதமுடைத்து மந்திரம் உடைத்து என்று கண்டோம். தமிழ் மந்திரங்களை உடையதாய் இருந்ததனால்தான் வழிபாடுகள் (அதாவது அரச்சனை) தமிழ் மொழியிலும் நடந்துள்ளன. இதனைத் திருஞானசம்பந்தர் தெள்ளத் தெளிய “தம்மலர் அடி ஒன்றியடியவர் பரவத் தமிழ்ச் சொலும் வடசொலும் தான் நிழல் சேர, அம்மலர் க் கொன்றை அணிந்த எம் அடிகள் அச்சிறுபாக்கம் தாட்சி கொண்டாரே” என்று அருளிச் செய்துள்ளார் அங்குத் “தமிழ்ச் சொலும், வடசொலும் தான் நிழல் சேர்” என்பது தமிழாலும், வடமொழியாலும் மந்திரங்களைச் சொல்லி மலரைத் திருவடிகளில் சுட்டிய குறிப்பை உணர் த்துவதாகும். இதனால் தான் அப்பரும் இறைவனை, “ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய் அண்ணா மலையுறையெம் அண்ணல் கண்டாய்” என்பார். (திருநாவுக்கரசர் தேவாரம், 6:23:5, ப,176)*

*தமிழ்மொழியின் அரச்சனையே இறைவனுக்குப் பிடித்தம் என்பதைச் சுந்தரர் வாழ்க்கை வரலாற்றில் இறைவர் உணர் த்துவார் ஆயினர். இவ்வுண்மையினைச் சேக்கிழார்,*

***“மற்றும் நீ வன்மை பேசிஷவன் தொண்டன் என்னும் நாமம்***
***பெற்றனை நமக்கு அன்பில்ஷபெருகிய சிறப்பில் மிக்க***
***அர் ச்சனை பாட்டே ஆகும்ஷஆதலால் மண்மேல் நம்மைச்***
***சொற்றமிழ் பாடுகென்றார் ஷதூமறை பாடும் வாயார்***

***(திருத்தொண்டர் புராணம் முதல் தொகுதி, பாடல் எண். 216, ப.120)***

*என்று அறிவித்துள்ளார். வடமொழியில் “ஏகதந்தாய நம” என்பதை ஒற்றைக் கொம்பனே போற்றி என்று கூறினும் விநாயகப் பெருமான் ஏற்பான் அல்லனோ? திருநாவுக்கரசரது போற்றித் திருத்தாண்டகங்களும், மணிவாசகரது போற்றித் திரு அகவலும் தமிழால் அரச்சனை நடத்தலாம் என்பதை உணர் ந்துவனவாகும்.*

***“எல்லாம் சிவன் என்ன நின்றாய் போற்றி ஷ எரிசுடராய் நின்ற இறைவா போற்றிஞ***
***வில்லால் வியன் அரணம் எய்தாய் போற்றிஷவீரட்டம் காதல் விமலா போற்றி”***

***(திருநாவுக்கரசர் தேவாரம், 6:5:1, ப.35)***

*இது திருவீரட்டானத் திருத்தாண்டகம் இதனை அர்ச்சித்தல் நலம் விளைவிக்கும்.*

*திருவாதவுரர் போற்றித் திருவகவல் என்னும் ஒரு பாடலையே பாடியுள்ளார். அப்போற்றித் திருகவலில் ஒரு பகுதி.*

***தாயே ஆகி வளர்த்தனை போற்றிஷகைதர வல்ல கடவுள் போற்றி***
***ஆடக மதுரை அரசே போற்றிஷ கூடலில் இலங்கும் குருமணி போற்றி***
***தென்தில்லை மன்றினுள் ஆடிபோற்றிஷஇன்றெனக் காரமுது ஆனாய் போற்றி***
***மூவா நான்மறை முதல்வா போற்றிஷசேவார் வெல்கொடிச் சிவனே போற்றி***

***(திருவாசகம் போற்றித் திருவகவல் 89-94 வரிகள், ப.15)***

*இதில் நூற்று முப்பத்து மூன்று அடிகள் போற்றி போற்றி என்று முடியும் அடிகள் ஆகும் சிவபுராணப் பகுதியில்,*

***"ஈசன் அடி போற்றி எந்தை அடி போற்றி***
***தேசன் அடி போற்றி சிவன்சே அடி போற்றி***
***ஆராத இன்பம் அருளும் மலை போற்றி***

***(திருவாசகம் போற்றித் திருவகவல் வரிகள் 11-16, ப.1)***

*என்றும் பரவிப் போற்றி வணக்கம் செய்துள்ளனர்.*

*இவ்வாறான போற்றி அமைந்த தொடர்களுள் நமக்கு வேண்டியவாறு நூற்றெட்டு வரிகளையோ, ஆயிரத்தெட்டு அடிகளையோ அமைத்துக் கொண்டு அர்ச்சனை புரியலாம். போற்றி என்று அமையாமல் காண், தோன்றும், கண்டாய், தாமே, நீயே போலும் என்று முடியும் தாண்டகங்களும் உள்ளன. அவற்றையும் அரச்சனைக்குப் பயன்படுத்தலாம். திருவாசகத்திலும் காண்க. வாழ்க. வெல்க என்னும் தொடர் கள் உள்ளன. "நாராணன் காண் நான்முகன் காண்ஷநால்வேதன் காண்" (திருநாவுக்கரசர் தேவாரம், 6:8:3, ப.59)*

***"வடிவேறு திரிசூலம் தோன்றும் தோன்றும்***
***வளர் சடைமேல் இளமதியம் தோன்றும் தோன்றும்"***

***(திருநாவுக்கரசர் தேவாரம், 6:8:1, ப.137)***

***"ஓசை ஒலிஎலாம் ஆனாய் நீயே***
***உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே"***

***(திருநாவுக்கரசர் தேவாரம், 6:38:1, ப.278)***

***"நீறணிந்த திருமேனி நிமலர் போலும்***
***நேமிநெடுமாற் கருளிச் செய்தார் போலும்"***

***(திருநாவுக்கரசர் தேவாரம், 6:53:3, ப.382)***

*மாணிக்க வாசகர் "வாழ்க" என்றும் "வெல்க" என்றும், "காண்க" என்றும் கூறியதை, "நமச்சிவாய் வாழ்க நாதன்தாள் வாழ்க இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க" என்றும்*

***"வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க***
***பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழகல்கள் வெல்க***

*என்றும் (திருவாசகம், போற்றித் திருவகவல், வரிகள் 89-94, ப.15)*

***"பரமன் காண்க பழையோன் காண்க***
***பிரமன்மால் காணாப் பெரியோன் காண்க"***

*என்றும் குறிப்பிடுவதை அறியலாம். இவ்வாறெல்லாம் சேர்த்து இலட்சம் போற்றித் தொடர் களை அமைத்துத் தமிழில் இலட்சார் ச்சனை நடத்தலாம். வேதாகம விதிகள் வேண்டும் என்ற கருத்தில் தான் கண்ணுதல் பரமனும் திருமூலரைத் தமிழில் திருமந்திரம் பாடுமாறு, செய்தனர். இதனைத் திருமூலர், "என்னைநன் றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே" என்று கூறியுள்ளார்.*

*எனவே, மந்திரம் என்பது வடமொழிக்கு மட்டும் உரிய தன்று. தமிழில் உச்சரிக்கப்படும் மந்திரங்களும் வலிமை வாய்ந்தன, நன்மை பயப்பன, வாழ்விற்கு வளம் சேர்ப்பன, நலவாழ்வைத் தரவல்லன என்பது மேற்காணும் கருத்துக்கள் மூலம் நன்கறிய முடிகிறது. இன்றைய சுழலில், மந்திரம் என்பது வடமொழியில் உச்சரித்தால்தான் நன்மை பயக்கும் என்ற எண்ணம் நிலவி வருகிறது. இவ்வெண்ணத்தை விட்டுவிட்டுத் தமிழில் நாயன்மார் களாலும், ஆழ்வார் களாலும் உச்சரிக்கப்பட்ட மந்திரங்கள் எல்லா வல்லமையையும் தந்துள்ளதைக் கொண்டு,*

*புரியாத மொழியால் இறைவனை வணங்குவதைவிட புரிந்து கொண்டும், உண்மையாகவும் இறைவனை வணங்க போற்றித் திருத்தாண்டகங்களில் உள்ள தமிழ் மந்திரங்களை உச்சரித்து நல்வாழ்வைப் பெறலாம். திருவைந்தெழுத்து மகிமை பின்வரும் பகுதிகளில் ஆராயப்படுகின்றது.*

**திருவைந்தெழுத்தின் சிறப்பு**

*சிவஞானபோதப் ''பாயிர''த்துள், ''பெரும் பெயர்'' எனுந் தொடர் வந்துள்ளது. இதற்குச் சி.அருணை வடிவேலு முதலியார் கூறும் அரிய உரை விளக்கம் வருமாறு.*

*''இருக்கு, ஏசுர், சாமம், அதர் வணம் என்னும் நான்கு வேதங்களில் ஒவ்வொன்றிலும் விரித்துச் சொல்லப்படும் கருத்தைச் சுருக்கமாகத் தொகுத்துக் கூறும் ''மகா வாக்கியம்'' ஒவ்வொரு வேதத்திற்கும் உண்டு. அவ்வாறே சிவாகமங்களின் ஞானபாதக் கருத்தைத் தொகுத்துக் கூறும் மகாவாக்கியமும் உண்டு. எனினும் இங்குப் ''பெரும்பெயர்'' என்றது ''சிவமூலமந்திரம்'' ஆகிய''பஞ்சாக்கரம்'' அல்லது''திருவைந்தெழுந்தை''யே என்பது யோகிகள் (சிவஞானமுனிவர் ) கருத்து. (சிவஞான போத மாபாடியப்பொருள்நிலை விளக்கம், ப.25)*

*வேப்ப மரத்தில் வாழ்ந்து, கசப்பான காய், இலை முதலியவற்றையே தின்று தின்றுப் பழகிப்போன புழு அருகில் இருந்த கரும்பின் மேல் தற்செயலாக விழுந்து அக்கரும்பின் தீஞ்சுவையை இனிது நுகர்ந்தாலுங்கூட முன்னைப் பழக்கம் காரணமாக அந்த வேப்பங்காயினையே மீண்டும் மீண்டும் விரும்பித் தின்னும் அதுபோல் அசத்தாய் உள்ள உலகப் பொருள்களை ''அசத்து'' என்று கண்டு களித்த உயிர்களுக்குப் ''பதிஞானம்'' விளங்கி அதனால் ''பதி'' காட்சிப்பட்ட போதிலும் முன்னைப் பழக்க வாசனையால் 'சுஅசத்துசுசு என்று ஒதுக்கிய அவ்உலகப் பொருள்களின் மேல் விருப்பம் நிகழ்தலும் கூடும் எனவே அவ்வாறு நிகழாதிருக்க இறைவனின் ''திருவைந்தெழுத்தை'' முறைப்படி ஒதுதல் வேண்டும் என ஆனந்தராசன் கூறுவார். (சிவஞானபோதம், வழித்திணை, விளக்கவுரை, ப.248)*

*சிவமூலமந்திரம் - திருவைந்தெழுத்து ''சிவாய நம'' என்பது திருவைந்தெழுத்து இதன் கண் ஐந்து எழுத்துக்கள் உள. ஒவ்வொன்றும் ஒவ்வோர் ஆழ்ந்த பொருளைத் தன்பால் கொண்டது.''சி'' பேரின்பப் பொருளாகிய''சிவத்'' தைக் குறிக்கும்''வா'' சிவத்தின் ஞானமாகிய ''அருளை''க் குறிக்கும் ''ய'' உயிரைக் குறிக்கும் ''ந'' திரோதான சக்தியையும் அதன் வழிப்பட்டனவாகிய''மாயை'', கன்மம், மாயேயம் முதலானவற்றைக் குறிக்கும் (திருவாசகம் மூலமும் உரையும் ப.2)*

*''நமசிவாய'' என்னும் திருவைந்தெழுத்தும் உண்டு. இதற்குத் ''தூலபஞ்சாக்கரம்'' என்று பெயர் சிவாய நம என்னும் திருவைந்தெழுத்திற்கு ''சுக்கும பஞ்சாக்கரம்'' என்று பெயர். நமசிவாய மந்திரம் ஒதுபவர்க்கு உலகப்பயன் கிட்டும் என்றும் ''சிவாய நம'' மந்திரம் ஒதுபவர்க்குப் பிறவி நீக்கம் கிடைக்கும் என்று அறிஞர் கூறுவர்.*

*பதி ஞானத்தைப் பெறுவதற்கு முன்பு, அதனைப் பெறும் நிலை கைகூடுதற் பொருட்டும், பதி ஞானத்தைப் பெற்ற பின்னரும் மலவாசனை தாக்காதிருத்தற் பொருட்டுமாக, இத் திருவைந்தெழுத்தை முறைப்படி ஒதுதல் வேண்டும். இத்தகைய மேலான மந்திரங்குறித்துத் தொல்காப்பியரே,*

***''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளக்கும்***
***மறைமொழி தானே மந்திரம் என்ப''***

***(தொல்காப்பியம் பொருளதிகாரம், செய்யுளியல், 171)***

*எனும் நூற்பாவில் சுட்டுவதிலிருந்து இதன் சிறப்பை ஒருவாறு அறியலாம்.*

*திருநாவுக்கரசர், சைவ சமயத்திற்கு மீண்டும் திரும்பிய போது சமணர் களால் இழைக்கப்பட்ட கொடுமைகளினின்றும், இறைவன் திருவருள் துணை கொண்டு உய்வு பெற்றமைக்கு உறுதுணையாக இருந்ததே நமசிவாய எனும் திருவைந்தெழுத்தேயாகும்.*

*தம்மைக் கல்லில் இறுகப் பிணித்து ஆழ்கடலில் அக்கொடியோர் தள்ளிய போதும், "சிவயோகம்பாவனை"யினால் திருவைந்தெழுத்து எனும் ஒப்பில்லா மந்திரத்தை ஓதியருளினார் அந்த அரிய திருப்பாடல்களைக் காண்போம்.*

***"சொற்றுணை வேதியன் சோதி வானவன்***
***பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்***
***கற்றுணைப் புட்டியோர் கடலிற் பாய்ச்சினும்***
***நற்றுணை யாவது நமச்சி வாயவே"***

***(திருநாவுக்கரசர் தேவாரம், 4:11:1, ப.99)***

***"நாவினுக்கு அருங்கலம் நமச்சி வாயவே"***
***"நண்ணிநின்று அறுப்பது நமச்சி வாயவே"***
***"நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே"***
***"நங்களுக்கு அருங்கலம் நமச்'சி வாயவே"***
***"நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே"***
***"நாடினேன் நாடிற்று நமச்சி வாயவே"***
***"நல்லக விளக்கது நமச்சி வாயவே"***
***"நன்னெறி யாவது நமச்சி வாயவே"***
***(திருநாவுக்கரசர் தேவாரம், 4:11:2-10, பாடலின் ஈற்றடிகள், பக்.100-108)***

*எனத் தமக்கு உற்ற துன்பம் குறித்தும், நமச்சிவாய என்னும் மந்திரத்தால், உய்ந்தமை குறித்தும் இனிதெடுத்து இயம்புகிறார் நாவுக்கரசர்.*

*நமசிவாய எனும் திருமந்திரம் அரிய கருவுலம், அது பிற்காலத்தில் உறுதியாக உதவக் கூடியது. ஆதலின் அதனையே தியானித்தேன். அதனால் அச்சம் தவிர் ந்தேன் என்கிறார். அருளாளர் அப்பர் பெருமான்,*

***"வைச்ச பொருள் நமக்கு ஆகும்ஷ எண்ணி நமச்சிவாய***
***அச்சம் ஒழிந்'தேன்"***

***(திருநாவுக்கரசர் தேவாரம், 4:80:4, ப.550)***

*இவ்வாறு கூறுபவர்*

***"திருநாமம் அஞ்சுஞ் சொல்லி"***

***(திருநாவுக்கரசர் தேவாரம், 6:61:6, ப.442)***

***"அஞ்செழுத்தும் வாய்நவில வல்லோர் க்கு"***

***(திருநாவுக்கரசர் தேவாரம் 6:66:6, ப.482)***

*என்றும் பல்வேறிடங்களில் இத் திருவைத்தெழுத்தை ஒத வேண்டும் என்கிறார். துயிலினின்றும் நீங்கி விழித்தெழும்போது கூட இத் திருமந்திரம் ஒதினாற் பயனுண்டு என்பார்.*

*"எந்தையார் திருநாமம் நமச்சி வாயஷஎன்று எழுவார் க்கு இருவிசும்பில் இருக்கலாமே" (திருநாவுக்கரசர் தேவாரம் 6:93:10, ப.எண் 681) என்றும், "உயிர் பிரிகின்ற காலத்துங்கூட இறைவா இம்மந்திரத்தை யான் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும்" என்ற பொருளில்,*

***"நாமம் பரவி நமச்சிவாயஷ என்னும் அஞ்செழுத்தும்***
***சாம்அன்று உரைக்க தருதிகண்ஷடாய், எங்கள் சங்கரனே"***

***(திருநாவுக்கரசர் தேவாரம், 4:103:3, ப,724)***

*என்றும், ''சிவாகம நூல்களைப் பற்றி தெரியாதவராயினும் இத்திருவைந்தெழுத்தை ஓதிஉணர்ந்தாற் போதும் இறைவன், அவர் களது உள்ளத்திலேயும் மகிழ்ந்து வீற்றிருந்து அருளுவன்'' என்ற பொருளில்,*

***''ஏதும் ஒன்றும் அறிவிலர் ஆயினும்ஷஓதி அஞ்செழுத்தும் உணர் வார் கட்குப்***
***பேதம் இன்றி அவரவர் உள்ளத்தேஷமாதும், தாமும்***
***மகிழ்வார் மாற் பேறரே''***

***(திருநாவுக்கரசர் தேவாரம், 5:60:1, ப.346)***

*என்று கூறுகின்ற நாவுக்கரசர்,*

***''இருந்து சொல்லுவன் கேண்மின்கள் ஏழைகாள்!***
***அருந்த வந்தரும் அஞ்செழுத்து ஓதினால்***
***பொருந்து நோய்ப்பிணி போகத் துரப்பதோர்***
***மருந்தும் ஆகுவர் மன்னுமாற் பேறரே''***

***(திருநாவுக்கரசர் தேவாரம், 5:60:4, பா.347)***

*என உலகம் உய்யும் பொருட்டு, இம்மன்பதைக்கும் இம்மந்திரப் பெருமையை உணர்த்துகின்றார்.*

*இவ்வாறு இனிதாக எடுத்துச் சொல்லியும் கேட்காமல் வீணே காலங்கழிப்பவர் மீது கழிவிரக்கங் கொண்டு, ''ஐயகோ! இவர் கள் பிறவி நோயால் பிணிக்கப்பட்டு, இறப்பதற்கும் மீண்டும் பிறப்பதற்குமே ஆளாகின்றார் களே!'' என்று அருள் ததும்பப் பாடுகின்றார்.*

***''திருநாமம் அஞ்செழுத்தும் செப்பா ராகில்***
***தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்***
***பெருநோய்கள் மிகநலியப் பெயர் த்துஞ் செத்தும்***
***பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே''***

***(திருநாவுக்கரசர் தேவாரம், 6:95:6, ப.700)***

*இவ்வாறு நூலின் பல்வேறிடங்களிலும் ''நமச்சிவாய'' என்னும் மந்திரத்தின் சிறப்புகளை நாவாரப் பாடும் நாவரசர், சிவாயநம வென்னும் சிந்தைச் சுருதினை!'' (திருநாவுக்கரசர் தேவாரம், 6:61:8,9, ப.43) எனச் ''சிவாய நம'' என்னும் திருவைந்தெழுத்தையும் சுட்டுகின்றார். இத்தகைய சிறப்பு மிக்க திருவைந்தெழுத்து மந்திரமாகிய ''நமசிவாய'' என்று கூறுவதால் உலகப் பயனும், ''சிவாயநம'' என்று கூறுவதால் பிறவி நீக்கம் பெற்று வாழலாம்.*

**வைணவத் திருமந்திரம்**

*பதரிகாசிரமத்தில், நாராயணன் தானே ஆச்சார் யனாகவும், நான் என்ற சீடானாகவும் இருந்து ஆன்மாக்கள் துன்பம் தீர உபதேசித்தது திருமந்திரம் என்பர் . சம்சாரிகள் தங்களையும் ஈசுவரனையும் மறந்து, ஈசுவர கைங்கர் யத்தையும் இழந்து, இழந்தோம் என்ற இழவும் இன்றிக்கே சம்சாரமாகிய பெருங்கடலிலே விழுந்து நோவுபட, சர் வேஸ்வரன் தனது கிருபையாலே இவர்கள் தன்மை அறிந்து, கரைமரஞ்சேரும்படித் தானே சிஷ்யனுமாய் ஆச்சாரியனுமாய் நின்று, திருமந்திரத்தை வெளியிட்டு அருளினான் என்பார் பிள்ளை லோகாச்சாரியார்,*

***மறந்தேன் உன்னை முன்னம் (திருமங்கையாழ்வார், பெ.தி.6:2:2, ப,1823)***
***வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்***

***(நம்ஆழ்வார் திருவாய்மொழி, 3:2:3 ப.எண்.3467)***

***வங்கத்தின் கூம்பேறும் மாப்பறைவை போன்றேனே***

***(குலசேகராழ்வார் பெரிய திருமொழி, 5, ப.997)***

***"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்***
***இறைவனடி சேராதார்"***

***(திருக்குறள் தெளிவுரை குறள், 10, ப.3)***

*என்னும் வரிகளும் இக்கருத்தை வலியுறுத்துகின்றன.*

**நாராயண நாமம்**

*வைணவத்தில் பகவானைக் குறிக்கும் பெயர் கள் மந்திரங்கள் பலவற்றுள்ளும் விஷ்ணு வாசுதேவன், நாராயணன் என்பன சிறந்தவை. இவற்றுள்ளும் அவன் இயல்புகளுள் ஒன்றை மட்டுமே விஷ்ணு, வாசுதேவன் என்ற பெயர் கள் குறிப்பிடும். நாராயண மந்திரமே ஈசுவரனது இயல்பு (சொரூபம்) வடிவம் (ரூபம்) பண்பு (குணம்) செல்வநிலை ஷ (விபுதிகள்) என்று எல்லாவற்றையும் தெரிவிப்பதாகும்.*

*இவ்வாறு முழுமை பெற்ற நாராயண மந்திரத்தையே வேதங்களும் முனிவர் களும் "மயர் வு அறமதி நலம்" அருளப் பெற்ற ஆழ்வார் களும், ஆச்சார் யர் களும் விரும்பினர் நாராயண நாமத்தை இட்டே ஆழ்வார் கள் இறைவனைப் பலகாலும் அழைத்தனர் என்பதை,*

***'நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்'***

***(திருமங்கையாழ்வார் பெ.தி 1:1:9, ப.1312)***

***'நாடும் நகரமும் நன்கறிய நமோ நாராயணாய'***

***(பெரியாழ்வார் திருமொழி, திருப்பல்லாண்டு 1:1:4, ப.234)***

***'ஞானச் சுடர் விளக்கு ஏற்றினேன் நாரணற்கு'***

***(புத்தாழ்வார் இரண்டாம் திருவந்தாதி, பா.எ.1.ப.2556)***

*போன்ற தொடர் களால் அறியலாம்.*

**திருமந்திரத்தின் பொருள்**

*"ஓம்" ஓம் என்ற இந்த ஒரெழுத்து ஒரு சொல் 'சுஅசுசு கரம் 'சுஉசுசு கரம் 'சுமசுசு கரம் என்ற மூன்று எழுத்துக்களையும் கொண்டு உண்டானதாகும். 'சுஅசுசு கரம் அனைத்துப் பொருள்களுக்கும் மூலகாரணமாகிய ஸ்ரீர˜மந் நாராயணனையும்,சுசுஉசுசு கரம் உலக மாதாவாகிய பெரிய பிராட்டியையும் "ம" கரம் ஆன்மாவாகிய சேதனர் களாகிய நம்மையும் குறிக்கின்றது. இதனால் எம்பெருமானுக்கும் நமக்கும் பிராட்டிக்கும் உள்ள உறவு குறிப்பிடப்படுகிறது. நம : இந்த நமப்பதம் எனக்கு யான் உரியன் அல்லன். ஈசுவரனுக்கே உரியவன் என்பதைக் குறிக்கின்றது இதனையே,*

***"ஆமையாய் கங்கையாய் ஆழ்கடலாய் அவனியாய்***
***அருவரைகளாய் நான்முகனாய் நான் மறையாய்***
***வேள்வியாய் தக்கணையாய்த் தானுமாய்"***
***என்கிறார் பெரியாழ்வார்***

***(பெரியாழ்வார் திருமொழி, 4.9.5.ப.607)***

*திருமந்திரத்தில் "ஓம்" "நம", "நாராயணாயசுசு என்ற மூன்று பதங்கள் உள்ளன. இவற்றுள்"ஓம்" என்பது இறைவன் ஒருவனுக்கு அடிமைப்பட்டிருத்தல் என்றும், "நம" என்பது இறைவன் ஒருவனையே உபாயமாகப் பற்றியிருத்தல் என்றும், "நாராணாய" என்பது, இறைவனையே இனிய பொருளாகக் கொண்டிருத்தல் என்றும் பொருள்படும்.*

*ஓம் என்ற பிரணவம் ஓரசையாக உள்ளதால் ஒரெழுத்து எனப்படும். ஓம் என்று பிரிந்து, பின்பு உம் எனப் பிரியும் "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு" என்பது*

*திருக்குறள். அகரம் எல்லா ஒலிகட்கும் முதலாய் இருப்பதால் உலக முதற்பொருளாகிய இறைவனைக் குறிக்கும் உகரம் அடிமை நிலையில், பிறர்க்கு இன்றி நாராயணனுக்கே அடிமை என்பதைக் குறிக்கும். மகரம் ஞானமடைய சீவனைக் குறிக்கும் ஈசுவரனுக்கு ஆன்மா அடிமை என்று நாராயணாய பொருள்பட விரிக்கையில், அகரத்துடன் ஏறிக் கழிந்த வடமொழி நான்காம் வேற்றுமை உருபு அடிமை நிலையைக் குறிக்கும்.*

*'மூன்று தாழயிலே தயிரை நிறைத்துக் கடைந்து வெண்ணெய் திரட்டுமா போலே மூன்று அட்சரத்தையும் எடுத்தது'' என்பார் பிள்ளை லோகாசாரியர் எனவே இது சகல வேதசாரம் - இருக்கு வேதத்தின் சாரம் -'' பு ''யஜுர் வேதத்தின் சாரம் -''புவ்'' சாமவேதத்தின் சாரம் - ''சுவ்'' இவை மூன்றுமு தூய்மையாகி ''ஆஉம்'' ஆகியது என்பர் . ஆகையால் இது வேதங்களின் சாரமாகியது. ''எழுத்துக்களில் அகரமாக இருக்கிறேன்'' என்பது கீதையில் கண்ணன் சொல். ஓம் என்ற பிரணவத்திற்கு இறைவனுக்கு அடிமையாயும், உரிமையாயும் உள்ள நான் தொண்டு செய்கிறேன் என்று பொருள்,சுசுயானே நீ என் உடைமையும் நீயேசுசு என்பன திருவாய் மொழிக் கருத்துக்கள் ஆகும்.*

**நாராயண சொற்பொருள்**

*''நாராயணா என்ற சொல் நார அயன என்ற இருவடசொற்களின் புணர்ச்சியில் தோன்றியது. இது இருவகையாக அமையும்.*

*''நாராயணம் அயனம்'' என்ற வேற்றுமைப் புணர்ச்சி ஆகும் போது, ''நாரங்களுக்கு அயனமாக இருப்பவன்'' என்று பொருள்படும் அயனம் - உபாயம், பலம் - ஆதாரம், நரனாகிய சீவான்மாவின் கூட்டம் நாரம், எம்பெருமான் சேதனர் களின் கூட்டத்தின் உபாயமாகவும், அனுபவிக்கப்படும் பலமாகவும் தன்னிடமிருந்து சேதன, அசேதனங்களுக்கு ஆதாரமாகவும் ஆகிறான்.*

*''நார அயனம் யஸ்ய'' என்று அன்மொழித் தொகையாகும் போது, ''நாரங்களை அயனமாக உடையவன்'' என்பது பொருள். அயன என்றால், பிரவேசிக்கும் பொருள். எனவே, சர் வேஸ்வரன் சேதனா சேதனங்களைப் பிரவேசிக்கும் பொருளாகக் கொண்டவன் நர அழிவற்றது (நித்யம்) என்ற பொருள் அடங்கும். பொருள்களின் திரட்சி நாரா ஆகியது நாரங்கள் 20 என்பார் பிள்ளை லோக்காச்சாரியார். எனவே நாராயணன் என்ற சொல்லுக்கு நாரங்களை ஆதாரமாக உடையவன் (அவற்றுள் நிறைந்திருப்பவன்) என்பதும், நாரங்களுக்கு ஆதாரமாக இருப்பவன் என்பதும் பொருள்கள். ''தன்னைத் தவிர எல்லாப் பொருள்களுக்கும் இறைவன் ஆதாரம்'' என்பதால், அவனது பரத்துவம் ஆகிய மேன்மையும் அவன் எல்லாவற்றிலும் நிறைந்திருப்பதால் அவனது சௌலப்பியம் என்ற எளிமையும் விளங்கும்.*

*வேறொரு வகையில் வடமொழி வேற்றுமைப் புணர்ச்சி அன்மொழித் தொகைகளின் அடிப்படையில் அந்தர் மியாமித்துவம், உபாயத்துவம், உபேயத்துவம் என்ற மூன்று பொருள்களும் விளங்கும் என்பார் பிள்ளை லோகாச்சாரியார்*

***''எம்பிரான் எந்தை என்னுடைச் சுற்றம்***
***எனக்கு அரசு என்னுடை வாழ்நாள்''***

***(திருமங்கையாழ்வார் , பெ.தி 1:1:6, ப.1309)***

*என்பதில் ''நாராயணன் எனக்கு உபகாரனாயும், தந்தை முதலிய எல்லா உறவு முறையாயும் என்னை ஆள்பவனாயும் என்னுடைய வாழ்நாளாயும் இருக்கின்றான்'' என்று திருமங்கை மன்னன் கூறுகிறார். நாராயணாய என்பதிலுள்ள ''ஆய'' என்ற நான்காம் வேற்றுமை, ஈசுவரனுக்குச் சேதனன் எல்லாவித அடிமைகளும் செய்ய வேண்டும் என்பதை விளக்குகிறது.*

***"சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம் நின்றால் மரவடியாம் நீள் கடலுள் - என்றும்***
***புனையாம் அணிவிளக்கம் பூம்பட்டாம் புல்கும்***
***அணையாம் திருமாற்கு அரவு"***

***(பொய்கையாழ்வார் முதல் திருவந்தாதி பா.எ.53, ப.2508)***

*என்பது போல், சேதனன் ஈசுவரனுக்கு எல்லாத் தொண்டும் புரிய வேண்டும் "படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே" என்பார் குலசேகர மன்னன் எனவே, நாராயண என உரைக்கும் போது, உரைக்கும் ஆன்மாவிற்குத் திருமால் உதவுபவனாகவும், உறவுக்காரனாகவும், ஆண்மை ஆள்பவனாகவும் திகழ்வாதால் தீவினைகளில் மனம் ஈடுபாடு கொள்ளாது நல்வினைகளில் ஈடுபட்டு நல்வாழ்வைப் பெறும் என்பது உண்மை. ஆகவே, திருமந்திரங்களாகத் திகழும். ஓம்நமோ நாராயணாய என்பதை உச்சரித்து வாழ்வோமாயின், இறைவனின் நேரடி ஆளுகையின் கீழ்வாழ்ந்து உலகத் துன்பங்களில் இருந்து விடுபட்டு வளமான வாழ்வைப் பெறலாம் என்பது நன்கு விளங்குகிறது.*

**திருமந்திரத்தின் பெருமை**

*திருமந்திரத்தினால் ஏற்படும் ஞானம் தன் முன்னோர் தனக்கெனத் திரட்டி வைத்த பெருநிதிக்கு ஒப்பானதாகும் இதனையே,*

***"திருமந்திரத்தினால் பிறக்கும் ஞானம்***
***பைதா கதநம் போலே"***

*என்று முமுட்சுப்படி கூறுகின்றது எங்ஙனம் ஸ்ரீமந் நாராயணனைக் காட்டிலும் மேலான தெய்வம் வேறு இல்லையோ! அப்படியே இத்திருமந்திரத்தைக் காட்டிலும் மேலான வேறு மந்திரம் இல்லையென்பதாம், இதனையே,*

***"பெரிய திருமந்திரம் (ஓம் நமோ நாராயணாய) பிரதானம் என்று முமுட்சுப்படியும்***
***"நாவினால் உய்ய நான் கண்டு கொண்டேன்***
***நாராயணாய வென்னும் நாமம்"***

***(திருமங்கையாழ்வார் , பெதி 1:1:2, ப.1304)***

*என்று திருமங்கையாழ்வரும் கூறியுள்ளார். தமது ஆன்மா உய்வதற்கு அறிய வேண்டிய இன்றியமையாத அரத்தங்கள் யாவும் இத்திருமந்திரத்தினுள்ளே என்று முமுட்சுப்படி கூறுகின்றது.*

*அறிய வேண்டும் அர்த்தமெல்லாம் இதற்குள்ளே உண்டு திருமகள் துணையோடு வந்த திருமாலிடம் திருமணங்கொல்லையில் நேரடியாக இந்தத் திருமந்திர உபதேசம் பெற்று வாள் வலியால் மந்திரம் பெற்றவர் என்ற பெயர் கொண்ட திருமங்கை மன்னன் "நலம் தரும் சொல்" என்று இதனைக் குறிப்பிடுவார்.*

***"குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார் ஷ படுந்துயராயின வெல்லாம்***
***நிலந்தரச் செய்யும் நீள்விசும் பருளும் ஷ அருளொடு பெருநில மளிக்கும்***
***வலம்தரும் மற்றும் தந்திடும் பெற்றதாயினும்ஷ மாயினச் செய்யும்***
***நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் ஷ நாராயணாவென்னும் நாமம்"***

***(திருமங்கையாழ்வார் பெ.தி 1:1:9, ப.1312)***

*என்றார் திருமங்கையாழ்வார்.*

***"நல்லிருள் அளவும் பகலும் நான் அழைப்பேன்***
***நாராயணா வென்னும் நாமம்"***

***(திருமங்கையாழ்வார் , பெ.தி. 1:1:5, ப.1308)***

*என்கிறார். இதனால் எம்பெருமானை இரவும், பகலும், துயரம் வந்த போதும், மரணம் வரும் போதும் நினைத்து அவனது திருமந்திரத்தை உச்சரிக்க வேண்டும் என்பது புலனாகிறது.*

**திருமந்திரம் அளிக்கும் பயன்கள்**

*இறைவன் நமது கட்புலனுக்கு வெகுதூரத்தில் இருந்த போதும், அவனது திருநாமமானது, நமக்கு அருகில் இருந்து உதவும். நமது விருப்பங்களை நிறைவேற்றும் இதனையே,*

***அவன் (எம்பெருமான்) தூரத்தனானாலும்***
***அது (திருமந்திரம்) கிட்டி நின்று உதவும்***

***(திருவெட்டெழுத்தின் பொருள் வினாவிடை, ப.20)***

*என்று முமுட்சுப்படி கூறுகிறது.*

*திரௌபதியானவள் தனக்கு மானபங்கம் ஏற்பட்ட காலத்தில் இரு கைகளையும் கூப்பி, கோவிந்தா! என்று கூறி அபயம் வேண்டினாள். வைகுந்தத்திலிருந்து ஸ்ரீமந்நாராயணன் திரௌபதியின் அபயக்குரல் கேட்டு, அங்கிருந்து தமது அருளால் ஆடை சுரக்கும்படிச் செய்தார். அவள் மானத்தைக் காத்தார். இந்த கோவிந்த நாமத்திற்கே இத்தனை வலிமையுண்டென்றால், திருமந்திரமாகிய நாராயண மந்திரத்தின் பெருமையை என்னவென்று கூறுவது.*

***“சொல்லும் க்ரம மொழியச் சொன்னாலும்***
***தன் ஸ்வரூபம் கெட நில்லாது”***

***(திருவெட்டெழுத்தின் பொருள், ப.21)***

*இத்திருமந்திரத்தின் பெருமைக்கேற்ப, சொல்ல வேண்டிய முறைப்படியும், சொல்ல வேண்டுமென்ற எண்ணம் இல்லாமல் சொன்னாலும், தன் குழந்தைகட்கு நாராயணன் என்ற பெயரை வைத்து அழைத்தாலும் பரிகாசமாகவும், இழிவாகவும் பொருள் உணர்ச்சியின்றிச் சொன்னாலும், சொன்னவரைப் பாதுகாக்கும் தன் காரியத்திலிருந்து தவறாது.*

**பிள்ளைகட்கு நாராயணன் என்ற பெயரிட்டுப் பலன் அடைதல்**

*அஜாமிளன் என்னும் கொடியவன் தன் பிள்ளைக்கு நாராயணன் என்று பெயர் வைத்தான் அவன் தான் சாகும் தருவாயில் தன் பிள்ளையை நாராயணா என்று அழைத்தான். அப்போது ஸ்ரீமந் நாராயணனின், தேவதூதர் கள் வந்து அவனது ஆன்மாவை வைகுந்தம் அழைத்துச் சென்றனர் என்று புராணம் கூறுகின்றது.*

**பரிகாசமாகவும் ஏளனமாகவும் கூறி நற்கதி அடைதல்**

*சிசுபாலன் போன்றவர் கள் எம்பெருமானைப் பரிகாசமாகவும் ஏளனமாகவும் அடிக்கடி கூறிய போதிலும் நாராயணன் அவர் களுக்கு நற்கதியருளினான். இத்திருமந்திரததைத் தக்க குருவின் மூலம் பெற்று, ஓதி நற்பயன் பெற்று, திருநாடு அடைவோம். எனவே இத்தகைய ஓம் நமோ நாராயணாய என்னும் திருமந்திரத்தின் பெருமைகளை திருமங்கையாழ்வார் காட்டுவதிலிருந்து மனிதனுக்கு வேண்டிய எல்லாப் பேறுகளையும் தந்து அவனைக் காக்கும். விருப்பங்களை நிறைவேற்றி பரமபதத்திற்குக் கொண்டு செல்லும் என்பது ஆராயப்பட்டுள்ளது.*

**முடிவுரை**

*மந்திரம் என்பது வாழ்விற்கு வளம் சேர் ப்பன. நல்வாழ்வைத் தர வல்லன. நாவுக்கரசர் பெருமான் நமச்சிவாய மந்திரத்தைத் தியானிதலால் அச்சம் தவிர்த்தேன் என்கிறார். மேலும் திருவைந்தெழுத்தை ஓதுவதால் இறைவன் அடியார் களின் உள்ளத்தில் மகிழ்ந்து வீற்றிருப்பான்*

*என்றும் சமணர் களால் தமக்கு ஏற்பட்ட இன்னல்களுக்கு நமச்சிவாய மந்திரம் உறுதுணையாக இருந்ததையும் பதிகங்களில் அழகுற எடுத்துரைப்பதை உணர முடிகின்றது. வாள் வலியால் மந்திரம் பெற்ற திருமங்கையாழ்வாருக்குத் திருமால் திருமகள் துணையோடு வந்து திருமணங்கொல்லையில் நேரடியாக உபசேதம் தந்து நாராயண நாமம் அளித்தார். நமது உயிர் அடைவதற்கு உறுதுணையாகும் என்றும் அம்மந்திரத்தைத் தியானித்தால் எல்லா நன்மைகளும் சேரும் என்றும் தன் முனைப்பு நீங்கும் என்றும் குறிப்பிடுவதை அறிய முடிகின்றது. எனவே மந்திரங்களுக்கு அற்புத ஆற்றல் உண்டு என்பதை நாம் உணர் ந்தவாறே பிறரும் உணர வேண்டும் என்பதை திருநாவுக்கரசரும் திருமங்கையாழ்வாரும் எடுத்துரைப்பதை இவ்வாய்வுக் கட்டுரை விளக்குகின்றது.*

**துணை நூல்கள்**


1. *இளம்பூரணர், தொல்காப்பியம், பொருளதிகாரம், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1953.*
2. *இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள், திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள் நான்காம் திருமுறை, தருமபுர ஆதினம் வெளியீடு, 1955.*
3. *இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள் நான்காம் திருமுறை, தருமபுரம் ஆதினம் வெளியீடு.*
4. *இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள் ஐந்தாம் திருமுறை, தருமபுரம் ஆதினம் வெளியீடு.*
5. *இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள் ஆறாம் திருமுறை, தருமபுரம் ஆதினம் வெளியீடு, 1995.*
6. *இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள், சுந்தரமூரத்தி சுவாமிகள் தேவாரம் ஏழாம் திருமுறை, தருமை ஆதினம் வெளியீடு, 1964.*
7. *இராமசுப்பிரமணியன், வ. த. (உ.ஆ), திருநாவுக்கரசர் சுவாமிகள் அருளிச் செய்த தேவாரம் ஆறாம் திருமுறை மூலமும் உரையும், தமிழ் நிலையம், 1995.*
8. *கமலக்கண்ணன், இரா. நாலாயிர திவ்வியப் பிரபந்தம் மூலமும் உரையும், வரத்தமானன் பதிப்பகம்.*
9. *சாம்பசிவனார், ச. திருநாவுக்கரசர் தேவாரத்தில் சைவசித்தாந்தக் கருத்துக்கள், வளவன் வெளயீடு, 1998.*
10. *சீனிவாசன், ம. பெ. வைணவ இலக்கிய வகைகள் திவ்வியப் பிரபந்த ஆய்வு, தேவி பதிப்பகம், 1994.*
11. *சுப்புரெட்டியார், ந. சைவம் வைணவம் ஓர் ஒப்பீடு, தெய்வத் தமிழ்கல்வி கலை பண்பாட்டு அறக்கட்டளை, 1992.*
12. *ஷோத்திரி மணவாளன், ஆழ்வார்களும் அருளிச் செயல்களும், 1976.*
13. *நாராயண வேலுப்பிள்ளை, ஆழ்வார்களும், பிரபந்தங்களும், ராஜேஸ்வரி புத்தக நிலையம், 1991.*
14. *பரந்தாமன், ஏ. திருமால் நெறிக்கட்டுரைகள், திருவேங்கடவன் பதிப்பகம், 1990.*

**References**


1. Ilampooranar. *Tolkappiyam: Porulathikaram*. South Indian Saiva Siddhanta Book Publishing Society, 1953.
2. Sri Ramalinga Thambiran Swamigal. *Thirugnana Sambandar's Thevaram: Fourth Thirumurai*. Dharmapuram Adheenam Publications, 1955.
3. Sri Ramalinga Thambiran Swamigal. *Thirunavukkarasar Swamigal's Thevaram: Fourth Thirumurai*. Dharmapuram Adheenam Publications.
4. Sri Ramalinga Thambiran Swamigal. *Thirunavukkarasar Swamigal's Thevaram: Fifth Thirumurai*. Dharmapuram Adheenam Publications.
5. Sri Ramalinga Thambiran Swamigal. *Thirunavukkarasar Swamigal's Thevaram: Sixth Thirumurai*. Dharmapuram Adheenam Publications, 1995.
6. Sri Ramalinga Thambiran Swamigal. *Sundaramurthy Swamigal's Thevaram: Seventh Thirumurai*. Dharmapuram Adheenam Publications, 1964.
7. Ramasubramanian, V. T. (Ed.), *Thirunavukkarasar Swamigal's Thevaram: Sixth Thirumurai – Original Text and Commentary*. Tamil Research Centre, 1995.
8. Kamalakkannan, R. *Naalayira Divya Prabandham: Original Text and Commentary*. Varathamana Publications.
9. Sambasivanar, S. *Saiva Siddhanta Concepts in Thirunavukkarasar's Thevaram*. Valavan Publications, 1998.
10. Srinivasan, M. P. *Vaishnava Literary Forms: A Study on Divya Prabandham*. Devi Publications, 1994.
11. Suppurettiyar, N. *A Comparative Study of Saivism and Vaishnavism*. Tamil Religious and Cultural Studies Foundation, 1992.
12. Shotthri Manavalan. *Azhwars and Their Divine Compositions*. 1976.
13. Narayana Veluppillai. *Azhwars and Prabandhams*. Rajeswari Book House, 1991.
14. Paranthaman, A. *Essays on Vishnu Devotion*. Thiruvengadavan Publications, 1990.